# காலாண்டுப் பொதுத் தேர்வு -2024

பதிவெண்

## IX - தமிழ்

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் - 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 15 x 1 = 15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "காலம் பிறக்குமுன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!" - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
   அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
   இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி
2. பொருத்தமான விடையைத் தேர்க.
   அ) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்
   ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
   இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
   அ) அ, இ ஆ) ஆ, இ இ) அ, ஆ ஈ) அ, ஆ, இ
3. மிசை என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
4. முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ________.
   அ) சர் ஆர்தர் காட்டன் ஆ) ஜான் பென்னி குவிக்
   இ) கரிகாலன் ஈ) ராஜேந்திர சோழன்
5. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
   அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா
6. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
   அ) தமிழர்களின் வீர விளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
   ஆ) தமிழர்களின் வீர விளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
   இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
   ஈ) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறுதழுவுதல்
7. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
8. தீரா இடும்பை தருவது எது?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
9. கள்ளிக்காட்டு இதிகாசம் நூலின் ஆசிரியர் ________.
   அ) கவிஞர் வாலி ஆ) கவிஞர் வைரமுத்து இ) கபிலன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்
10. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
    அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரக திறனறித் தேர்வு
    இ) தேசிய திறனறி, கல்வி உதவித் தொகை தேர்வு ஈ) மூன்றும் சரி
11. அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன் எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன் - நான் யார்?
    அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) தொல்காப்பியர் ஆ) தமிழ்ஒளி இ) வைரமுத்து ஈ) கந்தர்வன்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) நன்னூல் ஆ) பெரியபுராணம் இ) தொல்காப்பியம் ஈ) மணிமேகலை

14. உணர்ந்தோர் - இலக்கணக்குறிப்பு தருக.
அ) தொழிற் பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

15. ஆறாவது அறிவு எதனுடன் தொடர்புடையது?
அ) கண் ஆ) மூக்கு இ) செவி ஈ) மனம்

பகுதி - II (மதிப்பெண்கள் - 18)

பிரிவு - 1

4 x 2 = 8

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. *விடைக்கேற்ற வினா அமைக்க.*
அ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை கால்டுவெல் எழுதியுள்ளார்.
ஆ) விக்ரம் சாராபாய் இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

17. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.

18. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

19. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.

20. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

21. 'எனைத்தானும்' - எனத் தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 2

5 x 2 = 10

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

22. *பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.*
(தமிழிலக்கிய நூல்களை, நம்மை, வாழ்வியல் அறிவைக்)
அ) நாம் ________ வாங்க வேண்டும்.
ஆ) புத்தகங்கள் ________ கொடுக்கின்றன.

23. *பிழை நீக்கி எழுதுக.*
அ) சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.
ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழ பெருந்துணை புரிகின்றன

24. வல்லினம் மிகும் இடங்களுக்கு ஏதேனும் இரண்டு சான்று தந்து விதிகளைக் கூறுக.

25. *சொல்லுக்குள் சொல் தேடு :* பாய்மரக்கப்பல்

26. *தொடரை பழமொழி கொண்டு நிறைவு செய்க :*
அ) இளமையில் கல்வி ________. ஆ) கற்றோர்க்குச் சென்ற ________.

27. *கலைச்சொல் தருக :*
அ) Water Management. ஆ) Electronic Deivices

28. *ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக :*
குவிந்து - குவித்து



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 x 3 = 6

29. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணைய வழிச் சேவைகளை எழுதுக.

31. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***

தமிழகத்தில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக்கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

1. காளையை அடக்குபவர்கள் எதனைப் பயன்படுத்தக்கூடாது?
2. நிகழ்ச்சியின் தொடக்கம், முடிவில் காளைகளுக்கு என்ன செய்வர்?
3. ஏறுதழுவுதல் எவற்றை வளர்த்தெடுக்கும் விளையாட்டாக அறியப்படுகிறது?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2 x 3 = 6

32. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய். - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

33. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

34. ***அடிபிறழாமல் எழுதுக :***

அ) "தித்திக்கும்" - எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடல்.

***(அல்லது)***

ஆ) "அறிவியல் என்னும்" - எனத் தொடங்கும் "ஓ, என் சமகாலத் தோழர்களே" பாடல்.

பிரிவு - 3 2 x 3 = 6

35. தன்வினை - பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

பகுதி - IV

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 5 = 25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்தெழுதுக.

***(அல்லது)***

ஆ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுடன் ஒப்பிடுக.

39. அ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் கால் முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

***(அல்லது)***

ஆ) உம் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை உருவாக்குக.




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

1) Every flower is a soul blossoming in nature. Gerard De Nerval
2) Sunset is still my favourite colour, and rainbow is second. - Mattie Steparck
3) All early morning walk is a blessing for the whole day. - Henry David Thorean
4) The art of people is true mirror through their minds. - Jawaharlal nehru.
5) The biggest problem is the lack of love and charity. - Mother Teresa.

41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. வகுப்பறையைப் பராமரிப்பதில் உனது பொறுப்புகளைப் பட்டியலிடுக.

43. கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். - கவிமணி

- மேற்காணும் பாடலில் பயின்று வரும் நயங்களை எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 x 8 = 24**

44. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

*(அல்லது)*

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

*(அல்லது)*

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

46. அ) மழைநீர் சேகரிப்பு - என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

*(அல்லது)*

ஆ) அலைபேசியின் நன்மைகள் தீமைகள் குறித்து கட்டுரை வரைக.



www.Padasalai.Net